
151

உ

# பழநித்தல மஹாத்மியம்.

ஸ்ரீ



ஸ்ரீ

9 APR 1932

Published by

*P. Nataraja Pandaram,*

**Malaikovil Ayan Miras,**

**PALNI.**


Wrapper Printed at R. M. K. PRESS, PALNI.

Registered Reserved.

1929

[Price As. 1.

Q26:38.21924
N29
402026



ஸ்ரீ பழநியாண்டவருக்கு அபிஷேகமான அருட்பிரசாதங்கள், பஞ்சாமிர்தம், சந்தனம், விபூதி அடங்கிய செட் 1-க்கு தபாற்செலவுள்பட ரூ. 2—8—0.

# முகவுரை.

"பழநித் தலபுராணம்" என்னும் செய்யுள் வடிவாயுள்ள அரிய நூல் சாங்கோப சாங்கமாகப் பழநியின் சம்பந்தமான பெருமைகளை விளக்குகின்றது. அதற்கு இந்நாளில் தமிழுக்குக் குறைவிடமெனத் திகழும் யாழ்ப்பாணத்து மகா வித்துவான், நா. கதிரைவேற் பிள்ளை அவர்கள் உரைகண்டுள்ளார். அது வெகுகாலத்திற்கு முன்பே பெரிய புத்தக ரூபமாக வெளிவந்திருக்கிறது. அப்படியிருக்க, யான் இச்சிறு நூலொன்றை வெளியிட நேர்ந்த காரணம் யாதெனில், தற்காலப் போக்கில் பெருநூல்களைப் பலரும் படிக்க இயலாதிருப்பதும் பழநியின் மகிமையைச் சிறிதளவேனும் பலருமுணரவேண்டுமென்று எனக்குற்ற ஆவலுமாகும். இதனைப் படிப்போர்கள் தலபுராணத்தை முழுவதும் படிக்கவேண்டுமென்பது என் வேணவா.

முருகவேளடியார்களுக்கு இன்னமுதமாய் உதவவல்ல ~~அருட்~~ [redacted] சிலவற்றையும் இதிற் சேர்த்துள்ளேன்.

அன்பினால் அடியேன் வெளியிடுமிந் நூலின்கண்ணுள்ள குற்றங் குறைகளை அறிஞர்கள் பொறுத்தருள்வார்களாக.

பழநி,
1931.

**P. நடராஜ பண்டாரம்,**
மலைக்கோவில் அயன் பிராஸ்,

149026

உ

சிவமயம்.

ஸ்ரீ கணபதி துணை

# பழநி வரலாறு.

9 APR 1932

ஸ்ரீ முருகக்கடவுள் கலியுகப்பிரத்தியக்ஷ தெய்வம் என்பதும் தமிழர்கள் குல தெய்வமென்பதும் தமிழுக்கு எல்லையாகிய வேங்கடம் முதல் குமரி ஈறாக உள்ள பல சுப்பிரமணிய ஸ்தலங்களுள் முக்கியமான படைவீடு ஆறனுள் மூன்றாவதாகிய திருவாவினன்குடி என்னும் பழநித்தலம் மிக்க விசேடமுடையது என்பதும் பிரசித்தம். இத்திருவாவினன்குடியின் வரலாறு இங்கு வெகு சுருக்கமாகக் கூறப்படுகிறது.

திருவாவினன்குடி:— கைலையங்கிரியில் சிவபெருமானைச் சகல தேவர்களும் தரிசிக்குங்கால் பாதகாணிக்கை வைத்துத் தரிசித்தல் போல், ஒரு நாள் கலகப்பிரியாராகிய நாரதர் நவரச மணிகள் நிறைந்துள ஓர் மாதுளங்கனியை இறைவனுக்குச் சமர்ப்பித்து வணங்கினார். கனியைக் கணபதியும் கந்தனும் விருப்பத்தோடு கண்டனர். இதையறிந்த பார்வதி பரமேஸ்வரர்கள் ஒரு திருவிளையாடல் கருதி உலகை ஒரு நொடியில் வலம் வந்து முன்னிற்போர்க்கே இக்கனி உரித்தாம் என்று அருளினர். அதுகேட்ட விக்னேஸ்வரர் மௌனமாய் யோசித்துக்கொண்டிருக்கும் வேளையில், தேவசேனாபதியும் சூரசம்ஹாரனுமாகிய சுப்பிரமணியர் தமது பசிய மயில்வாகனத்தில் ஆரோகணித்து உலகை வலம்வரத் தலைப்பட்டனர். அதுபோது கணாதிபதியாகிய மூத்த பிள்ளையார் தமது தாய் தந்தையர்களாய லோகோற்பவ மூல பரம்பொருளாகிய பரமசிவத்தையும் பராசத்தியையும் வலம் வந்து துதித்து "உலகம் யாவும் நீங்களே" என்று உண்மை எடுத்துக்காட்டக் கனி பெற்றுக் களிப்பெய்தி இருந்தனர். அது கண்ட கந்தக்கடவுள் வெகுண்டு சரேலெனக் கீழிறங்கித் திருவாவினன்குடித்தலத்திற்கு எழுந்தருளிவிட்டனர்.

திரு—இலக்குமி ஆ—காமதேனு வினன்—சூரியன். (ஆகிய மூவரும் ஒருகால்) குடி—நிலையாக. பரமனைக்கோரி தவம்

 149026 பழநி வரலாறு.

செய்ததினால் இத்தலத்திற்கு திருவாவினன்குடி யென்ற நாமம் உண்டாயிற்று.

608
294.535

பழநி:- தம்மிளங்குமரன் ஊடலைத் தீர்க்கக்கருதிப் பார்வதி பரமேஸ்வரர்கள் குமரனைப் பின்தொடர்ந்து திருவாவினன்குடி யடைந்தனர் அடைந்த பரமன் முருகவேளை அன்புடன் நோக்கித் தமது திருவாக்கால் "பழம் நீயே" என்றருளிய காரணத்தால் இத்தலத்திற்கு பழநி என்ற திருநாமம் உண்டாயிற்று. ஆண்டவருக்கு பழங்கலந்த பஞ்சாமிர்த அபிஷேகம் சதா நடைபெற்றுவருவதற்கும் இதுவே காரணமென்பர்.

சத்திகிரி சிவகிரி:— பர்வதராஜகுமாரியாகிய பார்வதியம்மையார் திருக்கல்யாணத்தின்போது தென்கோடுயர்ந்து வடகோடு தாழ்ந்தது. அக்காலை பரமன் ஆக்ஞைப்படி பொதிகைக்குக் குறுமுனி யென்னும் அகத்தியமுனிவர் சென்று சமம் செய்து அங்கிருந்தே திருக்கல்யாணக் காட்சியும் கண்டானந்தித்தனர் அச்சமயம் லோகோபகாரமாக உதவ வல்ல கைலையங்கிரியிலுள்ள மஹா சஞ்சீவி மூலிகைகள் நிறைந்த சத்திகிரி சிவகிரி யென்னும் இரு கிரிகளையும் திருக்கல்யாண ஞாபகார்த்தமாகப் பரிசு பெற்று அதைத் தம்மிருப்பிடத்திற்குக் கொண்டுவரத் தம் சிஷ்யனாகிய இடும்பனை ஏவினர். இரு கிரிக்கும் மத்தியில் தண்டாயுதத்தைச் செலுத்திப் பிணைத்துக் காவடியாகக்கட்டிச் சுமந்து கொண்டுவரும் வழியில் இடும்பன் இத்தலத்தை அடைந்தான். அப்போது களைப்பெய்தியிருந்தமையால் கட்டமுதுண்ணக் கருதிக் காவடியை இங்கு இறக்கினான்.

முருகன் திருவிளையாடல்:— உடனே அசுர சம்ஹாரனை முருகபிரான் தனக்குகந்த சிவகிரி முடியில் ஆரோகணித்ததைக் கண்ட இடும்பாசுரன் கோபமுண்டு, போர்தொடுத்தும் வெல்ல முடியாமல் அகஸ்தியர்க்கபயமென்று மூர்ச்சித்தான் அதுகண்ட அகஸ்தியர் தன் சிஷ்யனுக்கேற்பட்ட அவஸ்தையைப் பொராதவராய், சுவாமி ஞானபண்டிதனென்று தெரிந்தும் ககன குளிகையைக் குருநாதனிடமே கொடுத்துப் பரிசோதிக்க சுப்ரமணியமும்

புன்சிரிப்புடன் அதை உட்கொண்டு திருப்ப வியர்வை ரூபமாகத் தமது திருமேனியில்த்திரட்டி ஓய் அகத்தீஸ்வரரே நாம் முன் உமக்கு உபதேசித்த முறைகளில் சிரேஷ்டமானது நமக்குஈய்ந்தீர் அதிலும் விசேடமானது தற்பொழுது ஓர் முறை உமக்கருள்வோமென அகஸ்தியரும் பெற்று உடனருந்தத்தாம் சுவாமியை மதியாது ககனமார்க்கமாகக்கொண்டு செல்லத்தக்க குளிகையை கொடுத்தும் சுவாமியை அது ஒன்றும் செய்யாமல், சுவாமி தமக்குக் கொடுத்தது தம்மை வாயு, வருண, அக்கினி மண்டலங்களில் தள்ளி தத்தளிக்கச்செய்தது.

அருள்:— அகஸ்தியர் அவஸ்தைதப்பட்ட பின்னர் நிதானமும் பூர்வக்ஞானமும் உதிக்கப்பெற்றார். பின்பு சுவாமிமேல் ஆமொழுக்தந்தாதி ஒன்று பாடிக்கொண்டே இரங்கி பாட்டினிறுதியில் பூமியை யடைந்து சுவாமியைப் பன்முறை மன்றாடிப் பிரார்த்தித்து தாமும் தம் சிஷ்யனும் செய்த அபசாரங்களினின்றும் விடுபட்டு அருள் பெற்றனர். அதுபோல் இன்றும் பக்தர்கள் பெரும்பாலும் சுவாமிக்கு அபிஷேகசாமான்களை இடும்பனைப் போல் காவடியாகக் கட்டிக்கொண்டுவந்து சுவாமிக்கு காணிக்கையாகச் செலுத்துவதும், அகஸ்தியருக்கு அன்று சுவாமி திருமேனிப் பிரசாதம் கொடுத்ததன்மூலம் அருள்பெறச்செய்தது போல் இன்றும் பக்தர்கட்கு திருவிழா பூஜைக்குமுன் விஸ்வரூப தரிசனமும் திருமேனி தீர்த்தப் பிரசாதமும் கொடுத்து அருள் புரிதலுமே சான்றென்பர்.

ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி பிரதிஷ்டையும் போகர் சமாதியும்:— பதினெண் சித்தர்களில் ஒருவராய போகர் தாம் கற்சிலையைப் புணர்ந்த தோஷம் நீங்க சுப்ரமணியப் பிரதிஷ்டை செய்து பூஜித்து அருள் பெறக் கருதி இவ்விடம்வந்து மலைமேல் தம் சித்து வல்லமையால் நவபாஷணத்தில் ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி திருவுருவம் அமைத்துப் பூஜித்து, அருள் பெற்று அஷ்டமாசித்துகள் ஆடி. முடிவில் மலைமேல் சமாதி ஆயினர். பின்னர் போகர் சிஷ்யர் புலிப்பாணி பாத்ர உடையார் ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமியைப் பூஜித்து வந்து சமாதியாயினர். அதன் பின் சைவப்பண்டாரங்கள் பெருமானைப் பூஜித்து வரலாயினர்.

Q26:38:21192P
N29

**ஷண்முகநதி:—** பழநிமலைத்தொடரில் தெற்கே உற்பத்தியாகும் ஆறு நதிகள் பலவாறு ஓடிவந்து முடிவில் இத்தலத்தில் ஆறும் ஒன்று சேர்ந்து ஷண்முகநதி யென்ற நாமத்துடன் பிரவாகிக்கின்றன.

**பழநித்தலப் பெருமையே பெருமை:—** இவ்வித மஹா விசேஷ மகிமைகள் சொல்லப்புகின் கணக்கிலடங்கா. அதுபற்றியன்றோ அருணகிரிநாத சுவாமிகளும் திருப்புகழில் "அதிசயமனேகமுற்ற பழநிமலைமீதுதித்த பெருமானே" என்றும் 'காசியின் மீறிய பழநியில் மேவிய பெருமானே" என்றும் பாடியுள்ளார்.

**ஆலயத் திருப்பணியும் அஷ்டபந்தன கும்பாபிஷேகமும்:—** ஒரு சேர ராஜன் வேட்டைமார்க்கம் தவரி இத்தலம் அடைந்து சுவாமி தரிசனம் செய்தமாத்திரத்தில் விசேஷ ஆலயத்திருப்பணி செய்ய மனங்கொண்டு. ஸ்தூபி, விமான, கர்ப்பக்கிரஹார்த்த மஹா நவரங்கமண்டபம் அமைத்து சோபான விசித்ரப்ராகாசமாய் விளங்கா நின்ற திருப்பழநிமலை நிலயத்துள் எழுந்தருளிய சின்மய சச்சிதானந்த தண்டாயதக்கடவுளுக்கு அஷ்டபந்தன கும்பாபிஷேகமும் செய்து வைத்து சுவாமிக்கு ஆறுகால பூஜைக்கும் வேண்டிய மானியங்கள் தானசாசனமாக ஸ்ரீ நைனுப்பண்டாரம் வசம் செய்து கொடுத்து, அச்செய்தியை சிலாசாசனமாக கர்ப்பக்ரஹச் சுவரிலும் கல்வெட்டுச் செய்து வைத்துளன். அதன் பிரதி சென்னை சர்க்கார் ஆர்க்யாலஜி (Archeology) ஆபீசிலும் உளது. பின்பொரு சமயம் பாண்டியநாட்டரசராகிய திருமலை நாயக்கரின் மந்திரி தளவாய் ராமப்ப அய்யர் இங்கு தரிசனார்த்தம் வந்து பிராம்மணரல்லாத சைவப் பண்டாரங்களிடம் தீர்த்தப் பிரசாதம் வாங்க அருவருப்புக்கொண்ட காரணத்தால் ஓர் அவஸ்தைக்குள்ளாகி உண்மை உணர்ந்தபின் தமது குற்றத்திற்குக் கழுவாயாக அஷ்டபந்தன கும்பாபிஷேகம் செய்து வைத்த பின்னும் சைவ பூஜகர்களான பண்டாரங்களிடம் பிராம்மணர்களும் தீர்த்தப் பிரசாதங்கள் வாங்கநேரிடுவது பொருதவராய் நான்கு பிராம்மணர்களை ஷடி சைவர்களுக்கு உதவியாக

இருந்து பிராம்மணர்களுக்குத் தீர்த்தப் பிரசாதம் கொடுக்க ஏற்படுத்தி ஆலயவிஷயமான சகல பொறுப்புகளும் தம்மைப் போன்ற சைவப் பண்டாரங்களுக்கே உரியன வென ஏற்பாடு செய்ததுடன் மேலும் தான் அவர்கட்கு சூப்ரென்டெண்ட் பவரும் கொடுத்ததாக உத்திரவு செய்தார். இதன் விபரம் மதுரை டிஸ்டிரிக்ட் மேன்யூலில் சென்னை கவர்ன்மென்ட் பிரசில் பிரசுரித்துளது.

பக்தர்கள் பெறும் பேறு:— மக்கட்குண்டாகும் இகபரசுக வாழ்வு கருதியே ஆலய வழிபாட்டை ஆன்றோர் நிருவினர் என்பதற்கு இப்புராதன புண்ணிய க்ஷேத்திரத்தில் யாவரும் கண்கூடாய் அறியத்தக்க அநேக சான்றுகளுளன: ஒரு பக்தன் தீராத கொடிய பாவகர்ம ரோகங்களாலும் மற்றும் வறுமையாலும் பீடிக்கப்பட்டவனெனினும், இக்ஷேத்திரத்தில் அரை அல்லது ஒரு மண்டலம் தங்கி பக்திபூர்வமாக அதிகாலையில் சண்முகநதியில் நீராடி சஞ்சீவிக்காற்றுத் தன் உடம்பில் படும்படி கிரிப் பிரதக்ஷிணம் செய்து மலையேறி சுவாமி தரிசனம் செய்து பிரார்த்தித்து போகரிஷியால் நவபாஷாணக் கட்டுக்கொண்டு அமைத்துப் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ தண்டபாணியின் அற்புதத்திருமேனியில் அபிஷேகித்துப் படிந்துள்ள பிரசாதங்களை உட்கொள்ளுவானாகில் தன் பூர்வகர்மத்தாலாய கொடிய ரோகமுந் தீர்ந்து சுகதேகியாய்த் திடசரீர ஆரோக்கியமும், சத்புத்திர சந்தானமும், தனலாப சம்பத்தும், சர்வாபீஷ்ட மனோரத இஷ்ட சித்தியும், வித்யாபிவிர்த்தியும் மேன்மேலும் பெற்று இகபரசுகவாழ்வு வாழ்வனென்பது பிரத்தியக்ஷ அநுபவமான உண்மை. இவற்றிற்கு மேலான சிவஞானமும் பதமுக்தி பரமுக்திப்பேறுகளும் வேண்டும் சிறந்த ஆன்மாக்கட்கு அவற்றையும் தந்தருளுவன் நம் பழநி ஆண்டவன். இக்கலியுகத்திற் கண்கண்ட தெய்வமாய் விளங்கும் பழநிக்கந்தவேளின் பெருமை அளப்பிடமுடியா அருமையுடையது.

சிவகிரி ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமினே நமஹ

சுபம்.

S. R. K. V. Press, Palni



சுவாமிக்கு கார்த்திகை தோறும் தங்கள் பெயர் நக்ஷத்திரத்தால் அர்ச்சனை செய்து தபால் மூலம் பிரசாதம் அனுப்ப வருடம் 1-க்கு ரூ. 6—12—0,

P. நடராஜ பண்டாரம், மலைக்கோவில் அயன்மிராஸ், பழனி.

